


# வித்யாவாணி

பங்குனி 9 (22.3.2021) தனிச்சுற்று சிறப்பு இதழ் 98 வெளியீடு : வித்யா பாரதி, தமிழ்நாடு








## அன்னை சரஸ்வதியின் மைந்தர்கள் நாம்..

**திலீப் பேத்கேகர்**

### 3. ஆசிரியர் மாறினால், கல்வி மாறும்!

குழந்தையின் உச்சரிப்பை புதிய பேனாவைக் கொடுத்து சரி செய்ய முடியாது. 'You cannot correct the pronounciation of a child by giving a new pen'.

இக்கூற்று உண்மையாக இருந்தபோதிலும் பல தலைவர்கள் ஒன்றும் செய்ய இயலாத நிலையில் தவிக்கின்றனர். கல்வித் துறையில் உள்ள பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும், மேற்கண்ட உச்சரிப்பை சரிசெய்ய பேனாவை மாற்றுதல் போன்ற பணிகள் நடைபெறுகின்றன. குப்பைத் தொட்டிகள் பேனாக்களால் நிரம்பி வழிகின்றன. ஆனால் அடிப்படைப் பிரச்சனை தீர்க்கப்படாமலே உள்ளது! கல்வித் துறையைப் பற்றி பல சமயங்களில், பல விஷயங்கள் பேசப் படுகின்றன. ஜனாதிபதி முதல் தெருவோரத்தில் உள்ள பாமர மனிதன் வரை எவரும் கல்வித்துறை குறித்து மகிழ்ச்சியாக இல்லை. எல்லோருமே கல்வித்துறையில் மாற்றம் வர வேண்டும் என்கின்றனர். பலவிதமான கல்வி குழுக்களும் கமிஷன்களும் ஏற்படுத்தப்பட்டு பலவிதமான குறிப்புகளும் பரிந்துரைகளும் வகுக்கப்பட்டபோதிலும் பெரிய மாற்றம் எதுவும் தென்படவில்லை. மாற்றமே நிகழவில்லை எனக் கூறமுடியாது. ஆனால் எதிர்பார்க்கக்கூடிய மாற்றமோ அதை நோக்கிய வேகமோ இல்லையெனக் கூறமுடியும். கல்வியில் கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்படுகிறது. அது பல நாடுகளைக் காட்டிலும் குறைவாக இருந்த போதிலும், எங்கு, எவ்விதமாக செலவுகள் செய்யப்பட்டன என்றும் அதனால் என்னென்ன சாதிக்கப்பட்டன என்பதை அறிந்து கொள்வதும் கடினமாக உள்ளது.

சிலர், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கோட்டு சூட்டு அணிவித்து கல்வியின் தரத்தை உயர்த்த முயலுகின்றனர், சிலர் லேப்டாப், டேப்லட் ஆகியவற்றைக் கொடுத்து கல்விப் புரட்சியை நிரூபிக்க முயலுகின்றனர்; குழந்தைகளுக்கு மதிய உணவு அளித்தால், அவர்கள் கல்வியைப் பெற முடியுமென சிலர் கூறுகின்றனர், வேறு சிலர், குழந்தைகளை வீட்டிலிருந்து பள்ளிக்கூடத்திற்கு, உயர்ந்த பெரிய வாகனங்களில் அழைத்து வருவதை ஏற்பாடு செய்தால், கல்வியின் தரம் வேகமாக வளரும் எனக் கருதுகின்றனர். இத்தகைய வசதிகளும் வாய்ப்புகளும் குழந்தைகளுக்கு என்னென்ன தேவையோ அவற்றை அவசியம் கிடைக்கச் செய்ய வேண்டும். தலைமுறை தலைமுறையாக சமுதாயத்தின் எந்தப் பிரிவினர் கல்வித் தரத்தினால் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளார்களோ, அவர்களுக்கு வசதிகளையும் வாய்ப்புகளையும் அவசியம் கிடைக்கச் செய்ய வேண்டும். ஆனால் இதற்கு, மக்களின் மனதை வெல்வதும், ஓட்டு அளிப்பதும் நோக்கமாக உள்ளது. துரதிருஷ்டவசமாக தற்போது திட்டங்களின் முன் முக்கியமாக ஓட்டுப்பெட்டி கண்முன் உள்ளது, இது வருத்தத்திற்குரியது.



எந்தவொரு திட்டத்தையும் வகுக்கும் பொழுதும் செயல்படுத்தும் போதும் முழுமையாக சிந்தித்து அனைத்துவிதமான சாத்தியக் கூறுகளையும் எல்லா கண்ணோட்டத்திலும் ஆராய்ந்து செய்ய வேண்டும். திட்டங்களை வகுத்த பின்னர் அத்திட்டத்தை மதிப்பிடுவதும் அதே அளவிற்கு முக்கியமாகும். ஆனால் இவ்வளவையும் அறிவுபூர்வமாகவும் சட்டபூர்வமாகவும் செய்ய யாரிடம் நேரம் உள்ளது? ஆக மொத்தம், யாரோ எதையோசெய்கிறார், விளைவுகளைப் பற்றி யார் அறிவார் என்ற நிலையே உள்ளது. இதைக் காணும்பொழுது, என்ன செய்ய வேண்டுமோ அதை செய்கிறோமா, என சிந்திக்க வேண்டியுள்ளது.

இன்று வரை நிறுவப்பட்டுள்ள கல்வி கமிஷன்களும், குழுக்களும், கல்வியாளர்களும் செய்துள்ள பரிந்துரைகளையும், செயல்திட்டங்களையும், செயல்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கும் நபர் ஆசிரியர் ஆவார். ஆசிரியரின் மன இயல்பிலும், கண்ணோட்டத்திலும், செயல்முறைகளிலும் மாற்றம் தெரியவில்லை எனில் கல்வியில் மாற்றம் நடைபெறாது. டேனியல் பினாக் என்ற சிந்தனையாளர், 'All it takes is one teacher- just one, to save us from ourselves and make us forget all the others' கூறியுள்ளார். அவர் ஆசிரியரிடம் எவ்வளவு உயர்ந்த நம்பிக்கை வைத்துள்ளார்!

செல்வாக்குள்ள நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் ஆசிரியருக்குத் தேவையான அனைத்து பொருள் வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். பொருள்களை புறக்கணித்தல் சரியல்ல. கட்டிடம், சந்திக்கும் ஏற்பாடு, நவீன பரிசோதனைக் கூடங்கள், கம்ப்யூட்டர், விளையாட்டு சாதனங்கள், கழிவறைகள் இவை அனைத்தும் தேவை. இவையெல்லாம் இருந்தாலும் மிகவும் முக்கியமான கருவி ஆசிரியர் ஆவார். துப்பாக்கி போரிடாது, அதைக் கையில் ஏந்தியிருக்கும் நபர்தான் போரிடுகிறான்; அல்ல, அந்நபரும் போரிடுவதில்லை; அவனுடைய மனம் தான் போரிடுகிறது என கூறும் பழமொழி ஒன்றுள்ளது. உண்மை யிலேயே மனம்தான் போரிடுகிறது. மனம் அச்சத்துடன் இருந்தால் துப்பாக்கியால் எதுவும் செய்ய முடியாது. மன உறுதி, மற்றும் அச்சமின்மை ஆகியகுணங்கள் இல்லையெனில் ஆயுதங்கள் பொருளற்றதாக ஆகிவிடும்.

கல்வித்துறையிலும் மிகவும் நவீனமான கருவிகள் தற்போதுள்ளன. ஆனால் அவற்றை நல்லவிதமாக பயன்படுத்தக் கூடிய ஆசிரியரின் மனமும், இதயமும் தயார் நிலையில் இல்லையெனில் இந்தக் கருவிகள் இருந்தாலும் ஒன்றுதான், இல்லாமல் போனாலும் ஒன்றுதான். அந்நிலையில் கருவிகளின் தாக்கம் ஒன்றும் இருக்காது. பல வித்யாலயங்களில் இத்தகைய பொருட்கள் தூசி படிந்துள்ள நிலையில் காணக் கிடைக்கின்றன. இச்சூழ்நிலையில் குருதேவர் ரவீந்திர நாத் தாகூர் அவர்கள் ஆசிரியரின் முக்கியத்துவத்தைப் பற்றி வலியுறுத்தி கூறிய, 'Real Education can be imparted only by the teacher and not by any method' (உண்மையான கல்வியை ஆசிரியர்களால் மட்டுமே வழங்க முடியுமே தவிர முறைகளால் அல்ல) என்ற கூற்று நினைவுக்கு வருகிறது.

உண்மையான ஆசிரியருக்கு கொடுக்கப்பட்ட மிக உயர்ந்த கௌரவம் இது.

மேடாஸ் மற்றும் பஸ்மாசுரனின் கதைகளை அனைவரும் அறிவர். மேடாஸ் எந்தப் பொருளைத் தொட்டாலும் அது தங்கமாக விடும். பஸ்மாசுரன் எதைத் தொட்டாலும் அது சாம்பலாகி விடும். மேடாஸின் தொடுதலினால் உயர்வடைந்த ஆசிரியர், ஒருபாமர மனிதனையும், சாதனை புரியும் மதிப்பு மிகுந்த நபராக உயர்த்துகிறார். அத்தகைய ஆசிரியர் பொருட்களுக்காக காத்திருப்பதில்லை, தனது பணியை தொடர்ந்து செய்வார். அவர் தன்னிடமுள்ள பொருட்களை வைத்து, தனது கற்பனைத்திறன் மற்றும் கலைத் திறனை பயன்படுத்தி நல்லவிதமாக உபயோகித்து முன்னேறுவார். அவர் தங்கமாக ஆக்குவார். சூனியத்திலிருந்து படைப்பை உருவாக்குவார். ஆனால், அத்தொடுதல்



# வித்யாவாணி







பஸ்மாசுரனைப்போல் இருந்தால், தங்கம் மண்ணாவதற்கு நீண்ட நேரம் ஆகாது. பல வித்யாலயங் களில் விளையாட்டுப் பொருட்களும் மிகவும் உயர்ந்த பரிசோதனைக் கூடங்களும் உள்ளன. ஆனால் ஆசிரியரின் கை பஸ்மாசுரனின் தொடுதலாக உள்ளது. மேடாஸின் தொடுதலாக இல்லை; ஆக அப்பொருட்கள் பயன்படாமல் வீணாகின்றன. எனவே பொருட்களைவிட, மேடாஸின் தொடுதலைக் கொண்ட ஆசிரியருக்கு அதிகமான தேவை உள்ளது.

நாடு முழுவதும் இத்தகைய தொடுவுணர்வுள்ள ஆசிரியர்கள் கிடைக்கத்தான் செய்கின்றனர். ஆனால், அவர்களின் எண்ணிக்கை துரதிருஷ்டவசமாக இது குறைவாக உள்ளது. இத்தகைய ஆசிரியரைத் தேடி, அவர்களை உற்சாகப்படுத்தி, ஊக்கப்படுத்தி அவர்களை தட்டிக் கொடுக்கும் பணி நடைபெற வேண்டும். மேலும், இத்தகைய ஆசிரியர்களின் எண்ணிக்கையை எவ்வாறு பெருக்குவது, என சிந்திக்க வேண்டும். இப்பணியை முன்னுரிமை கொடுத்து செய்ய வேண்டும். இதுவே இன்றுகல்வித் துறையின் மிகுந்த தேவையாகும். "No nation can rise above its education; and no education can rise above the teachers."

எந்தவொரு நாட்டின் வளர்ச்சியும் அந்நாட்டின் கல்வியைச் சார்ந்துள்ளது. கல்வியின் தரம் எவ்வாறுள்ளதோ அதற்கேற்ற வகையிலேயே நாட்டின் முன்னேற்றம் நடைபெறும்; மேலும் கல்வியின் தரம் நாட்டிலுள்ள ஆசிரியர்களின் தரத்தைப் பொறுத்துள்ளது. சிறப்பான, சமர்ப்பண உணர்வுள்ள, கொள்கைப் பிடிப்புள்ள ஆசிரியர்கள் இருந்தால் கல்வியின் தரம் உயரும். நாடும் முன்னேறும்.

ஓர் ஆசிரியர் மிகவும் அறிவுக்கூர்மையுடனும், திறமையாகவும் பல கலைகளை கற்றவராக இருந்தாலும் மனதில் அவரது வேலையைப் பற்றி சிரத்தை, பிடிப்பு, பக்தி இல்லாமல் இருந்தால், அவர், தான் கற்றுக் கொடுக்கும் மாணவர்களிடம் அன்புடனும் பாசத்துடனும் இல்லாமலிருந்தால் அவரது அறிவாற்றலும் கலைகளும் பயன்படாது என்பது உண்மை.

தனது வேலையைப் பற்றியும் தனது மாணவர்களிடமும், அவரது மனதில் தாயைப் போன்ற அன்பு இருந்தால், அந்த ஆசிரியருக்கு ஓர் அசாதாரண சக்தி ஏற்படும்; அதனால் அவர் எந்தவொரு அசாத்தியமான பணியையும் இயல்பாகவே செய்து காட்ட முடியும். கற்பிக்கும் பணியை செய்தல் என்பது தாய் தர்மத்தை காப்பவரின் தொழிலாகும் எனக் கூறிய ஆச்சார்ய வினோபாவிற்கு தாயின் இதயம் கிடைக்கப்பெற்ற ஆசிரியரின் நினைவு வருகிறது. அவர்கள் சம்பளத்திற்காக வேலை செய்பவர்கள் அல்ல. எவ்வளவோ கம்ப்யூட்டர்களும் நவீன ரோபாட் போன்ற கருவிகள் கிடைத்தாலும் அவை ஆசிரியரின் இடத்தை நிரப்புவதில்லை. ஏனெனில் ரோபாட்டோ கம்ப்யூட்டரோ மாணவர்களை சபாஷ் எனக் கூறி பாராட்டவும் உற்சாகப்படுத்தவும் முடியாது. மாணவர்களின் முதுகை தட்டிக்கொடுக்கும் ஆசிரியரின் கையே அவரது உண்மையான பலமாகும்.

ஹார்டுவேர்-இன் முக்கியத்துவத்தை புரிந்துகொண்டுள்ள நமது அதிகாரிகளும் தலைவர்களும், என்று, சாப்ட்வேரின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்கிறார்களோ, அந்நாள் கல்விக்கான ஒளி பொருந்திய நாளாக அமையும். உயர்ந்த, சிறப்பான ஆசிரியரே வித்யாலயத்தின் செல்வமாகும். செல்டன் டேவிஸ் என்ற கல்வியாளர் "The value of every school depends primarily upon the teacher" பள்ளியின் மதிப்பீடு அதன் ஆசிரியர்களின் தரத்தைக் கொண்டே அமையும் எனக் கூறுகிறார்.

நெல்சன் பாசிங் என்பவரும் ஆசிரியரின் முக்கியமான உறுப்பாகக் கருதி, "In any scheme of Education, I give the central place to the teacher" எந்தவொரு கற்பிக்கும் முறையும் ஆசிரியரை மையமாகக் கொண்டிருக்க வேண்டும் என்கிறார்.

ஜேபி நாயக் என்பவரும் பொருள்களின் முக்கியத்துவத்தைக் காட்டிலும் ஆசிரியருக்கு முதன்மை இடம் அளிக்கிறார்"Policy and Performance in Indian Education, என்ற நூலில், "When it comes to programs of qualitative improvement, money is necessary, but only as a minor investment. What these programs basically need is human effect and intellectual academic inputs of able, hardworking and committed teachers" என எழுதுகிறார். (தர மேம்பாட்டுத் திட்டங்களுக்கு வரும்போது, பணம் அவசியம், ஆனால் ஒரு சிறிய முதலீடாக மட்டுமே. இந்த திட்டங்களுக்கு அடிப்படையில் தேவைப்படுவது மனித விளைவு மற்றும் திறமையான, கடின உழைப்பாளி மற்றும் உறுதியான ஆசிரியர்களின் அறிவுசார் கல்வி உள்ளீடுகள்)

கல்வியின் முன் உள்ள சவால்களில் மத்திய அரசாங்கத்தின் கல்வித் துறை, பயிற்சி தொடர்பாக வெளியிட்ட கருத்து மிகவும் முக்கியமானதாக உள்ளது "Teacher's performance is most critical input in the field of education. Whatever policies may be laid down, in the ultimate analysis, these have to be interpreted and implemented by teachers, as much through their personal examples as through teaching-learning process."

## குருநானக்கின் ஆசி



குருநானக் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, ஒரு கிராமத்தில் அறிவுரை செய்வதற்காகத் தங்கினார். அந்த கிராம மக்கள் அவரை அன்புடன் வரவேற்று உபசரித்தனர். மற்றும் அவர் கூறிய அறிவுரையையும் மிகுந்த கவனத்துடன் கேட்டனர்.

மறுநாள் நானக், புறப்படும் நேரத்தில், கிராம மக்களிடம், 'பிரிந்து செல்லுங்கள்' என ஆசியளித்தார். சீடர்கள் இதைக் கேட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் எதுவும் பேசவில்லை.

மாலை நேரம்; வேறு ஒரு கிராமத்தை சென்றடைந்தனர். அந்த ஊரில் ரௌடிகள் இருந்தனர். நானக்கை அந்த ஊர் மக்கள் நிராகரித்தனர். கடுமையான சொற்களைக் கூறினர்; அவர்களுக்குள்ளேயே சண்டை போட்டுக்கொள்ளவும் தயாராக இருந்தனர். இதன்பிறகு நானக், அங்கிருந்து, புறப்படும்போது, அவர்களை, 'கூட்டமாக சேர்ந்து இருங்கள்' என ஆசியளித்துச் சென்றார்.

சீடர்களுக்கு மிகவும் ஆச்சர்யமாக இருந்தது. "குருவே, நல்லவர்களை பிரிந்துவிடுங்கள் என்கிறீர்கள். கெட்டவர்களை சேர்ந்து இருங்கள், எனச் சொல்கிறீர்களே? ஏன்?" எனக் கேட்டனர்.

அதற்கு, நானக், "நல்லவர்கள் பிரிந்து பல இடம் சென்று அவர்களைப் போல், பல நல்லவர்களை உருவாக்குவார்கள். ஆனால் கெட்டவர்கள் சென்றால் கெட்டதே நடக்கும். ஆதலால், பிரியாமல், அவர்கள், ஒரே இடத்திலேயே இருந்தால் நல்லதே நடக்கும்; அதனால் அவ்வாறு கூறினேன்" என்றார்.

(ஆசிரியரின் செயல்திறன் கல்வித்துறையில் மிக முக்கியமான உள்ளீடாகும். எந்தக் கொள்கைகள் வகுக்கப்பட்டாலும், இறுதி பகுப்பாய்வில், இவை ஆசிரியர்களால் விளக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும், கற்பித்தல் கற்றல் செயல்முறை மூலம் அவர்களின் தனிப்பட்ட எடுத்துக்காட்டுகள் மூலமாகவும்.)

ஆசிரியரைத் தேர்ந்தெடுக்கும் பொழுதும் தேர்ந்தெடுத்த பின்னரும், அவர் பணியில் இருக்கும் பொழுதும், அவருக்கான பயிற்சிக்கு மிகுந்த கவனத்துடன் திட்டங்களைத் தீட்ட வேண்டும். தெரிவு செய்வது மட்டுமோ, பயிற்சி அளிப்பது மட்டுமோ பொறுப்பை முழுமையாக நிறைவேற்ற இயலாது. தேர்ந்தெடுத்த பின்னர் பதவியை தக்க வைத்துக் கொள்வதற்கான எண்ணம் உருவாகி விடுகிறது. பின்னர் புதிதாகக் கற்கும் மனப்பான்மையும், புதிதாகச் செய்யும் விருப்பங்களும் இருப்பதில்லை. இதற்கான வழிகளைக் கண்டறிய வேண்டும்.

இக்கட்டுரை ஆசிரியர், வித்யாபாரதியின் அகில பாரத துணைத் தலைவர் ஆவார்.